# தென்காசி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் 01.08.2022

**மன்றப்பொருள் 1**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

தென்காசி மாவட்டத்தில் உள்ள தென்காசி நகராட்சி பகுதி முழுவதும் மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் (Hill Area Conservation authority) அமைவதால் கட்டிடங்கள் கட்ட அனுமதி பெறுவதற்கும், மனைப்பிரிவு அனுமதி மற்றும் தனிமனை வரன்முறை அனுமதி பெறுவதற்கும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.எனவே மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் (HACA) இருந்து தென்காசி நகரில் உள்ள அனைத்து பகுதிகளையும் நீக்குவதற்கு அரசிற்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண் : 109**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 2**

அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகளை வரன்முறைப்படுததிட நமது ஆட்சியில் (2006–2011ல் ) சதுர அடிக்கு ரூ.2/– நகராட்சியில் பெற்றுக்கொண்டு அனைத்து பகுதிகளிலும் வரன்முறை செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டு தென்காசி நகர் பகுதிகளில் பெருன்பான்மையான தனிமனைகள் வரன்முறை செய்யப்பட்டது.

20.10.2016 வரை பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகள் வரன்முறை செய்ய பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகளை வரன்முறை செய்ய வேளாண்மைத் துறை ,வனத்துறை ,வருவாய் துறை மற்றும் கனிம வளத்துறை ஆகிய துறைகளில் தடையின்மை சான்று பெற்ற பின் நகர் ஊரமைப்பு துறை அனுமதி பெற்ற பின் நகராட்சியில் உரிய கட்டணம் செலுத்தி தனிமனைகளை வரன்முறை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் படி, தென்காசி நகராட்சி பகுதியில் மூன்று (3) தனிமனைகள் மட்டுமே வரன்முறை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தனிமனைகளை வரன்முறை செய்ய மேற்படி துறைகளில் தடையின்மை சான்று பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் தனிமனைகளை வரன்முறை செய்ய இயலவில்லை. இதனால் அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி அரசாணையை ரத்து செய்து நமது ஆட்சியில் இருந்தது போல் சதுரடிக்கு கட்டணம் நிர்ணயம் செய்து தனி மனைகளை வரன்முறை செய்ய அரசிற்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண் : 110**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 3

## நகர்மன்ற துணை தலைவர் மற்றும் 27 நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

தென்காசி நகர் மன்ற தலைவர் அவர்கள் அலுவலக பயன்பாட்டில் உள்ள நகராட்சி ஈப்பு வாகனம், குளிர் சாதனம், அலுவலக உதவியாளர் மற்றும் மன்ற கூட்டப்படி ஆகியவைகளை வேண்டாமென தெரிவித்ததை இம்மன்ற உறுப்பினர்கள் தென்காசி நகர்மன்ற தலைவரை பாராட்டி கொண்டு வரப்படும் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறரது

அ.கு: மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண் : 111**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள ஏழ்மையான குடும்பங்களை அரசு சலுகையினை பெறும்வகையில் வறுமை கோட்டிற்கு கீழ் சேர்ப்பதற்கு இந்நகர்மன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள். அதனடிப்படையில் மேற்படி வார்டுகளில் உள்ள குடும்பங்களை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் சேர்ப்பதற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் மூலம் வரப்படும் விண்ணப்பங்களை தென்காசி, வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு இம்மன்றம் பரிந்துரை செய்யப்படுகிறது.

அ.கு: இந்நகர்மன்றம் மூலம் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களை வறுமைகோட்டின் கீழ் உள்ள பட்டியலில் சேர்ப்பதற்கு தென்காசி, வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 112**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 5

தென்காசி நகராட்சியில் தணிக்கை கட்டணமாக அரசாணை (நிலை ) எண் 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 17.01.1994 நகராட்சிகளின் 1920ம் ஆண்டு சட்டம் விதி முறை 62(ஏ)ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தங்களின் படியும் , 1992 –1993 முதல்

தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகளின் உண்மை செலவினத்தில் 50 வதவீதம் தணிக்கை கட்டணமாக நகராட்சி நிதியிலிருந்து அரசு நிதிக்கு செலுத்தப்பட வேண்டும்.

அதனடிப்படையில் தென்காசி நகராட்சி 2020–2021ம் ஆண்டிற்கு தணிக்கை கட்டணமாக ரூ.87194/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (2020–2021 ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை பத்தி எண். 55 )

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 113**

அனுமதிக்கப்பட்டது

## <u>மன்றப்பொருள் 6</u>

இந்நகராட்சியில் பதிவறை எழுத்தராக பணிபுரியும் திருமதி.P.பிரகாஷ்வரி என்பவரை 22.06.2022 முதல் 24.06.2022 வரை மூன்று நாட்களுக்கு கோவை, தமிழ்நாடு, நகரியியல் பயிற்சி நிறுவனத்தின் கடித ந.க.எண்.323/19/அ3, நாள்.14.06.2022ன்படி பயிற்சி வழங்குவதற்கான செலவுத்தொகை ரூ.3000/– ஐ வங்கி வரைவோலையாக செலுத்தவும், மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2561/2013/சி1)

**தீர்மானம் எண் : 114**

அனுமதிக்கப்பட்டது

## <u>மன்றப்பொருள் 7</u>

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு, மன்னார்கோவில், திருமலையப்பபுரம், ஆசிர்வாதபுரம் மற்றும் தென்காசி வாய்க்கால்பாலம் ஆகிய 5 இடங்களில் உள்ள நீரூந்து நிலையங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 5 இடங்களில் உள்ள மின்மோட்டார்களை இயக்கவும், பராமரிக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 13 நபர்கள் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.07.2022ல் முடிவடைகிறது.எனவே மேற்படி குடிநீர் பணிக்கு ஆகஸ்ட் 2022 முதல் நவம்பர் 2022 வரை மின்மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 115**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 8**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட தெற்கு மாசி வீதியில் (பிள்ளையார் கோவில் முதல் டிராபிக் சிக்னல் வரை) உள்ள தார் சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்படும் வகையில் உள்ளதால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி நடந்து வரும் நிலையில் கூடுதல் ஆழமாக தோண்டி எடுத்து சாலை அமைக்க வேண்டியுள்ளதாலும், இரண்டு பக்கம் உள்ள வாறுகால் ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்றி கூடுதல் அகலத்திற்கு சாலை அமைக்க வேண்டியுள்ளதாலும், சாலை ஓரங்களிலும் நடுவிலும் Thermoplastic Paint மற்றும் Reflector அமைக்க வேண்டியுள்ளதாலும் மேலும் மேற்படி சாலையானது அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையாகவும் உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு கூடுதல் இனங்களோடு மேற்படி தார் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 116**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 9

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பழுதடைந்த பயனற்ற நிலையில் தேங்கி இருக்கும் பழைய இரும்பு பொருட்களை ஏலமிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 117**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 10

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 76 நாள் 30.06.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 22.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 10 வடக்கு மவுண்ட் ரோட்டில் சிறுமின் விசைப்பம்பு அமைத்தல் | 1.50 | திரு A,செய்யது அலி ஒப்பந்தக்காரர் | 0.30% குறைவு |
| | | | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 1.02% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருA.செய்யது அலி ஒப்பந்த்க்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 118**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 11

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 83 நாள் 30.06.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 22.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஆய்க்குடி ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வளமீட்பு மையத்திற்கு இரும்பிலான கதவு மற்றும் சுற்றி இரும்பிலான வலை அமைத்தல் | 1.90 | திரு S,பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.06% குறைவு<br>2.00% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதிருS,பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 119**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 12

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 77 நாள் 30.06.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 22.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலமுத்தாரம்மன் கோவில் முதல் காட்டுபாவா | 9.80 | திரு M,சண்முகவேலு ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடுநிலைப்பள்ளி வரையுள்ள தார் சாலை சரிசெய்தல் | | திரு M.முருகன் ஒப்பந்தக்காரர் | 2.18%கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருM,சண்முகவேலு ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 120**

அனுமதிக்கப்பட்து

**<u>மன்றப்பொருள் 13</u>**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022−23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 11.07.2022ம் தேதியன்று முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்க்காடு தலைமை நீரூந்து நிலையத்திலிருந்து தென்காசி நீரேற்றும் நிலையம் வரை உள்ள மின்மோட்டார்களை ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி (13 நபர்கள்) | 9.60 | திரு S,முருகன் ஒப்பந்தக்காரர்<br><br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 0.19%குறைவு<br><br>5.75%கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS,முருகன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 121**

அனுமதிக்கப்பட்டது

## <u>மன்றப்பொருள் 14</u>

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022–23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 11.07.2022ம் தேதியன்று முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.07.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு மாசி வீதி (பிள்ளையார் கோவில் முதல் டிராபிக் சிக்னல் வரை) கூடுதல் இனங்களோடு தார் சாலை அமைத்தல் | 9.00 | திரு M,சண்முகவேலு ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு |
| | | | திரு M.முருகன் ஒப்பந்தக்காரர் | 2.18%கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருM,சண்முகவேலு ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 122**

அனுமதிக்கப்பட்டது

## <u>மன்றப்பொருள் 15</u>

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 27 பழைய வார்டு எண் 24 படிக்கட்டு பள்ளிவாசல் முடுக்கு தெரு மற்றும் நைனார் தெரு ஆகிய இரண்டு தெருக்களில் உள்ள ஆழ்துளை கிணறு கைப்பம்புகளை அகற்றிவிட்டு சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் புதியதாக அமைக்க நகர்மன்ற உறுப்பினர் அவர்களால்

கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி தெருக்களில் சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 123**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 16

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 7 பழைய வார்டு எண் 33 உச்சிமாகாளி அம்மன் கோவில் 3ம் தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய்அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் பொது குடிநீர் குழாயினை அதே தெருவின் சற்று தொலைவில் மாற்றியமைத்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பொது குடிநீர் குழாயினை மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 124**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 28 பழைய வார்டு எண் 23வடக்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு ( பாவடி தெரு) வில் உள்ள பட்டுபோன பூவரசு மரம் மற்றும் புதிய வார்டு 11 பழைய வார்டு 10 ஆபாத் பள்ளிவாசல் நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள மரங்களின் கிளைகள் அருகில் உள்ள வீடுகளில் முறிந்து விழுந்து பொதுமக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதால் அதனை வெட்டி அப்புறப்படுத்த நகர்மன்ற

உறுப்பினர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த உத்தேச செலவு தொகை ரூ25000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 125**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 18

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் பொறியியல் பிரிவிற்கு புதியதாக மடிக்கணினி மற்றும் பிரிண்டர் வாங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 79 நாள் 30.06.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது அதன்படி22.07.2022ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | மெகா சிஸ்டம்ஸ்<br>116E பிளஸ்எஸ் பிளாசா<br>இரயில்வே பீடர் ரோடு, தென்காசி | ரூ75000/- |
| 2 | தி சென்னை கம்ப்யூட்டர்ஸ்<br>1/9 மேல மாசி வீதி<br>தென்காசி | ரூ76000/- |
| 3 | முத்து கம்ப்யூட்டர்ஸ்<br>145/4 ஸ்ரீ காவேரி டவர்ஸ்<br>தெற்கு மாசி வீதி, தென்காசி | ரூ77000/- |

அ.கு: மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி மெகா சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 126**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 19

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டவாறு உள்ள சிறுமின்விசை பம்பு குடிநீர் கட்டிடங்கள் பழுதடைந்து தண்ணீர் இல்லாமல் உபயோகமற்றுசாலையில் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் காரணத்தினால் அவற்றினை இடித்து அப்புறப்படுத்திட அந்தந்த வார்டுகளில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்களால் கோரப்பட்டுள்ளது.

| புதிய வார்டு எண் | பழைய வார்டு எண் | தெருக்களின் விபரம் |
|---|---|---|
| 28 | 24 | தெற்கு கடையத் (பாவடி) தெரு |
| 2 | 6 | LRS பாளையம் (சாவடி வடபுறம்) |
| 21 | 19 | சொர்ணபுரம் மேட்டுத் தெரு (வடக்கு ஓரம்) |
| 30 | 21 | புதுமனை 1ம் தெரு (கீழ் கடைசி) |
| 24 | 29 | புதுமனை 5ம் தெரு |
| 17 | 13 | ஐவராஜா கோவில் தெரு (கோவில் வடபுறம்) |

மேற்கண்ட வார்டுகளில் உள்ள தெருக்களில் இருக்கும் பழுதடைந்த உபயோகமற்ற சிறுமின்விசை பம்பு கட்டிடங்களினை இடித்து அப்புறப்படுத்துவதற்கான உத்தேச செலவு தொகை ரூ 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 127**

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 20

இந்நகராட்சிக்குசொந்தமான 7வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு கூடம் மிகவும் மோசமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால் சத்துணவு கூடத்தை இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். எனவே மேற்படி பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளியின் அதே இடத்தில் புதியதாக

சத்துணவு கூடம் மற்றும் கூடுதல் கழிப்பிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 128**

அனுமதிக்கப்பட்டது

**(ஒம்).R.சாதிர்**
**நகர்மன்றத்தலைவர்**
**தென்காசி நகர்மன்றம்**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**தென்காசி நகராட்சி**

# தென்காசி நகர்மன்ற அவசரக் கூட்டம்  01.08.2022

**மன்றப்பொருள் 1**

இந்நகராட்சி பழைய வார்டு எண் – 8, புதிய வார்டு எண் – 6, மலையான் தெருவில் வார்டு – பி, பிளாக் – 29, நகரளவை 74 டவுண் சர்வே பீல்டு ரிஜிஸ்டரின்படி, அமைந்துள்ள தங்கமுத்து அம்மன் கோவில் பொதுமக்கள் வழிபடக்கூடிய பொதுவழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் கோவில் நிர்வாகி அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1541/2022/அ1

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 129**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 2**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 3 பழைய வார்டு எண் 2 மற்றும் புதிய வார்டு எண் 5 பழைய வார்டு எண் 3ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடங்கள் மிகவும் சேதமடைந்துள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களால் மேற்படி சமுதாய நலக்கூடங்கள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மேற்படி சமுதாய நலக்கூடங்களில் பராமரிப்பு பணி மற்றும் மராமத்து பணிகள் மேற்கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 130**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 22 பழைய வார்டு எண் 32 மைனாப்பேரி செல்லும் சாலையில் உள்ள சுகாதார வளாகம் பொதுமக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் பொது சுகாதார பிரிவிற்கு பொருட்கள் பாதுகாப்பு அறை தேவைப்படுவதால் மேற்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள சுகாதார வளாகத்தினை பொதுசுகாதார பிரிவிற்கான பொருட்கள் பாதுகாப்பு அறையாக மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 131**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 15 பழைய வார்டு எண் 7 மலையான் தெரு சுப்பிரமணியசாமி கோவில் எதிரில் உள்ள ஆழ்துளை கைபம்பு ஆழ்துளை கிணற்றில் நீர் இல்லாத

காரணத்தினால் பொதுமக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள கைபம்பினை அகற்றும்படி நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளார். அதனடிப்படையில் மேற்படி கைபம்பினை அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் : 132

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 20 பழைய வார்டு எண் 18 SKP தெரு பேலி புரோட்டா கடை மேல்புறம் உள்ள ஆழ்துளை கிணற்றின் அடிபம்பு வீட்டின் வாசலில் இடையூறாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சென்றுவர இடையூறாக உள்ளது. மேற்படி அடிபம்பினை அகற்றி அதன் அருகிலுள்ள சின்டெக்ஸ் டேங்கில் மின்மோட்டார் பொருத்தி தர மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்படி சின்டெக்ஸ் டேங்கில் மின்மோட்டார் பொருத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத் தொகை ரூ20000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் : 133

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சியில் 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரே ஒரு குடிநீர் டேங்கர் சொந்தமான TN 76 P 6930 டம்பர் பிளேசரை குடிநீர் SS டேங்கராக மாற்றியமைத்து இந்நகரில் உள்ள குடிநீர் இணைப்பு இல்லாத பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் : 134

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 7

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகத்தில் பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு வழங்க குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்துடன் கூடிய குடிநீர் தொட்டி அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ2.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் : 135

அனுமதிக்கப்பட்டது

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப்பள்ளிகள் மற்றும் துவக்கப்பள்ளிகள் உள்ள கழிப்பறைகள் சுத்தம் செய்யும்

பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏ.வி.எம். சா்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண்.987 நாள்.28.05.2021ன்படி ஏற்கனவே உள்ள விலைவிகிதத்தில் 01.06.2021 முதல் 31.05.2022 முடிய ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும், அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு 01.06.2021 முதல் 31.05.2022 முடிய உள்ள காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

தற்போது பணிகாலம் முடிவடைவதாலும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் அதுவரைக்கும் 01.06.2022 முதல் 31.08.2022 முடிய உள்ள மூன்று மாத காலத்திற்கு மட்டும் ஏற்கனவே உள்ள ஊதிய விகிதத்தில் பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணியினை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண். 54 நாள். 26.05.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட உத்திரவு 31.08.2022 உடன் முடிவடைவதால் மேலும் மூன்று மாதங்களுக்கு (01.09.2022 முதல் 30.11.2022 ) முடிய உள்ள காலங்களுக்கு நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .

அ.கு இராஜபாளையம் , ஏ.வி. எம் சா்வீஸ் பாயிண்ட் என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ளள ஊதிய விகிதத்தில் பள்ளியின் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் துாய்மை பணிகளை மேற்கொள்ளவும் மூன்று மாதங்களுக்கு மட்டும் (01.09.2022 முதல் 30.11.2022 முடிய) பணிகள் செய்ய அனுமதித்தும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4683/2016/எச்1

**தீர்மானம் எண் : 136**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 9**

இந்நகராட்சி பகுதியில் உள்ள வண்ணாண்குளம் சமுதாய கழிப்பிடம், அஞ்சலக அருகிலுள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் மத்தளம் பாறை நுண்ணுயிர் உரமாக்கும் மையம் ஆகிய இடங்களில் (NAPKIN INCINERATOR) அமைக்கவும் , புதிய பேருந்து நிலையத்தில் (NAPKIN VENDING MACHINE ) அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/—க்கு ( இரண்டு லட்சம் மட்டும் ) நகர்மன்றத் தீர்மான எண்.49 நாள். 26.05.2022 ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது கூடுதலாக ரூ.50000/— செலவினம் மேற்கொண்டுள்ளது. எனவே கூடுதலான செலவினம் ரூ. 50000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. வண்ணாண்குளம் சமுதாய கழிப்பிடம், அஞ்சலக அருகிலுள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் மத்தளம் பாறை நுண்ணுயிர் உரமாக்கும் மையம் ஆகிய இடங்களில் (NAPKIN INCINERATOR) அமைக்கவும், புதிய பேருந்து நிலையத்தில் (NAPKIN VENDING MACHINE) அமைக்கவும், அதற்கான கூடுதலான செலவினம் ரூ.50,000/— (ஐம்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 945/2022/எச்1

**தீர்மானம் எண் : 137**

அனுமதிக்கப்பட்டது

**மன்றப்பொருள் 10**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு ஜெராக்ஸ் மிஷின் வாங்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அதனை பயன்படுத்த இயலவில்லை. மேலும் அலுவலகத்தில் ஜெராக்ஸ் மிஷின் இல்லாத காரணத்தினால் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பக்கூடிய அறிக்கைகள் தாமதம் ஏற்படுகிறது. மேலும் வெளி இடங்களில் ஜெராக்ஸ் அதிகமாக செலவு ஏற்படுகிறது. ஆகவே புதிதாக ஒரு ஜெராக்ஸ் மிஷின் வாங்குவதற்கு உத்தேச செலவு தொகை 1.70லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 138**

அனுமதிக்கப்பட்டது

**(ஒம்).R.சாதிர்**
**நகர்மன்றத்தலைவர்**
**தென்காசி நகர்மன்றம்**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**தென்காசி நகராட்சி**